2. தகவல் கோரல்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் வண்ணப் பூச்சுகளின் மீது சுண்ணாம்பு பூசுவதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. குறளரசு பாரதி அவர்கள் இங்கே, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட காஞ்சிபுரம் தொகுதியிலே உள்ள பெரிய கோயில் ஏகாம்பரேசுவரர் கோயிலைப் பற்றி, தினமணி பத்திரிகையிலேயும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலேயும் வந்த ஒரு செய்தியை, அந்தத் தவறான தகவலை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 35 ஆண்டுகளுக்கு முன்னாலே காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கு வெள்ளித் தேர் செய்யப்பட்டது. அந்த வெள்ளித் தேர் செய்யப்பட்ட இடம் ஆயிரக்கால் மண்டபம். ஆகவே 30 ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே வெள்ளை அடிக்கப் பட்டிருக்கலாம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். நானும் நேரடியாகச் சென்று பார்த்தேன். ஆனால், அங்கே இப்போது தான் வெள்ளை அடிக்கப்பட்டதாகவும், அதே நேரத்தில் அங்கே பணியாற்றுகின்ற குருக்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படவில்லை என்றும்கூட, அந்தப் பத்திரிகைகளிலே வந்ததை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குருக்களுக்கு அங்கே ஊதியம் வழங்கப் படுவது கிடையாது. அங்கே வசூலாகின்ற பணத்தில் ஒரு பகுதியைத்தான் அவர்களுக்குப் பங்காகக் கொடுக்கிறார்கள். ஆகவே, ஒரு தவறான தகவலை வெளியிட்ட அந்தப் பத்திரிகை மீது நிர்வாகம் வழக்குத் தொடர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட செய்திகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கின்ற நேரத்திலே அது சரிதானா என்று நேரடியாகச் சென்று பார்த்து விட்டு வந்து இங்கே சொல்லவேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள ஆலயங்களை எல்லாம் சீராக்கவேண்டும்; குளங்களை எல்லாம் சீர்படுத்த வேண்டும் என்கிற நல்ல காரியங்களைச் செய்கின்ற நேரத்தில், அந்தப் பத்திரிகையும், இந்த உறுப்பினரும் இப்படி தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(ஆ) மதுரையில் குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு.... (குறுக்கீடு)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்..... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன் முத்துராமலிங்கம் முடிக்கட்டும். நான் வரிசையாகக் கூப்பிட்டுக் கொண்டு வருவேன்.

1987 ஏப்ரல் 2]

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரை மாநகரில் கடுமையான ......(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் பேசும் போது அவர் அவையில் இல்லை, (குறுக்கீடு) அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. தங்கவேலு, உங்கள் இடத்தில் போய் அமரவேண்டும். திரு. பொன் முத்துராமலிங்கம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரை மாநகரில் கடுமையான ....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடித்தவுடன் உங்களை அனுமதிக்கிறேன். அதில் ஒன்றும் தவறில்லை நான் அவரைப் பேச அழைத்துவிட்டேன். முடிக்கட்டும். ஒரு நிமிடத்தில் ஒன்றும் ஆகப் போவதில்லை. (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் ; மதுரை மாநகரத்தில் கடந்த 10 நாட்களாக கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தாய்மார்கள் எல்லாம் தெருவுக்கு வந்து பேருந்துகளை மறித்துப் போராட்டம் நடத்துகின்ற அடிப்படையிலேயும், தாய்மார்கள் எல்லாம் சாலையை மறித்துக் கொண்டு தொடர் போராட்டம் நடத்துகின்ற அடிப்படையிலேயும்.....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தெய்வநாயகமும் சேர்ந்தே கேட்கலாம். திரு. தெய்வநாயகத்தின் பெயரையும் இணைத்துக் கொள்கிறேன்

திரு. பொன் முத்துராமலிங்கம் : சாலையிலே அமர்ந்து போராட்டம் நடத்தி, பல மணிநேரங்கள் கழித்து,...... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இன்று மானிய கோரிக்கை வருகிறது. அதிலே எல்லாவற்றையும் சேர்த்துப் பேசி விடலாம். தண்ணீர் பிரச்சினை தானே? மானியக் கோரிக்கையிலே பேசும் போது பேசலாம். (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் : தாய்மார்கள் இன்றைக்கு ரோடுகளிலே.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுப்பியதும் அனுமதித்து விட்டேன். ரெக்கார்ட் ஆகி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பேசும்போது பதில் சொல்வார்கள். (குறுக்கீடு)

திரு. பொன் முத்துராமலிங்கம் : இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. குடிதண்ணீர் பஞ்சம் அங்கே கடுமையாக இருக்கிறது. மாநகராட்சியிலே ஆணையாளர் இல்லை. இந்த அவலமான சூழ்நிலையை உடனடியாகப் போக்கவேண்டும்; உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். பதிலை இப்போதே தந்து அது பத்திரிகையிலே வந்தால்தான் மதுரை மாநகரத்து மக்களுக்கு ஆறுதலாக இருக்கும். எனவே விளக்கம் வேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் வண்ணப் பூச்சுகளின் மீது சுண்ணாம்பு பூசப்படுவதாகக் கூறப்படுவது குறித்து—தொடர்ச்சி.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, நம்முடைய வணக்கத்திற்குரிய உறுப்பினர் திரு. பாலாஜி அவர்கள் தனிப்பட்ட முறையில், சொல்லாத கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைச் சொல்லத் தயாராக இல்லை. நான் பிறந்தது காஞ்சி மாநகரத்தில். அவர்களைவிட காஞ்சியைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நானும் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற உறுப்பினர்தான்... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரி வார்த்தையெல்லாம் நல்லது அல்ல. இதையெல்லாம் யார் கேட்டார்கள்? காஞ்சிபுரம்தான் உலகத்திலிருக்கிறவர்களுக்கெல்லாம் சொந்தம் ஆயிற்றே.

திரு ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் தலைநாயகர் அவர்களே, ஏகாம்பரநாதருடைய கோயிலில் நானும் ஒரு அமைச்சரும் அந்த இடத்தைப் பார்த்தோம். தினமணியில் வந்த கருத்துக்களை வைத்து நான் பார்க்கவில்லை. நானே பார்த்தேன். அங்கே வண்ணப்பூச்சுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றுச் சிறப்புடைய அதிலே சுண்ணாம்பு அடித்திருக்கிறார்கள். சுண்ணாம்பு அடித்திருப்பதால் 5 ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் பாழ்பட்டிருக்கின்றனவே அந்த மீண்டும் பெற முடியுமா? அதைப் பாதுகாக்க வேண்டாமா என்றுதான் கேட்டிருக்கிறேன். அங்கேயுள்ள பூசாரிக்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதுபற்றி நான் கேட்கவும் இல்லை, பேசவும் இல்லை. ஆகவே சொல்லாத கருத்துக்களையெல்லாம், தவறாகச் சொல்லுவது மாண்புமிகு உறுப்பினருக்கு அழகல்ல. வரலாற்றுச் சிறப்புடைய கோயில்களிலே...... (குறுக்கீடு) அவர் கருத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் — (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு உறுப்பினர்களும் பேசி இருக்கிறீர்கள். இதிலே நான் என்ன தீர்ப்பை அளிப்பது? (குறுக்கீடு) என்ன தீர்ப்பு வழங்குவது, நீங்களே சொல்லுங்கள் (குறுக்கீடுகள்).